1972 நவம்பர் 14]

தஞ்சை மாவட்டத்தில் வாழும் முன்னாள் படை வீரர்களுக்கு மானியம்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970—71-ம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் வாழும் முன்னாள் படை வீரர்களுக்கு இம்மாநிலத்தின் பல்வேறு நல நிதிகளிலிருந்து ஒதுக்கப் பட்ட மொத்த மானியம் எவ்வளவு?

(இ) மேற்குறிப்பிட்ட காலத்தில் இம்மாவட்டங்களில் மானியம் அளிக்கப் பெற்ற முன்னாள் படை வீரர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு அளிக்கப் பெற்ற தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ரூ. 1,30,334.30.

(இ) முன்னாள் படை வீரரின் எண்ணிக்கை 309.

வழங்கப்பட்ட தொகை ரூ. 1,06,499.65.

Duties of Temple Trustees

* 312 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the duties of Temple Trustees?

அறங்காவலர்கள் ஆற்ற வேண்டிய பணிகள்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திருக்கோயில் அறங்காவலர்கள் ஆற்றவேண்டிய பணிகள் என்னென்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஒரு விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

Renovation work of Srivilliputtur Andal Temple

* 313 *Q.*—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the renovation work of Srivilliputtur Andal Temple has commenced; and

(*b*) the names of the members of renovation Committee?

@ 121–123-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1972 நவம்பர் 14

திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில் திருப்பணி.

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில் திருப்பணி வேலை தொடங்கிவிட்டதா?

(இ) திருப்பணிக்கு உறுப்பினர்கள் பெயர்கள் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) திருப்பணிக் குழு உறுப்பினர்கள் பெயர்கள் பின்வருமாறு:—

(1) திரு. பி. எஸ். ஆர். செண்பகமூர்த்தி, வியாபாரி, சிவகாசி.

(2) திரு. பி. ப. அண்ணங்கராசாரியார், காஞ்சிபுரம்.

(3) திரு. எம். டீ. இராமானுசம், ஸ்ரீ வில்லிப்புத்தூர்.

(4) திரு. என். கிருஷ்ணசாமி நாயுடு, ரெங்கநாதபெருமாள் கோயில் தெரு, ஸ்ரீ வில்லிப்புத்தூர்.

(5) திரு. பி. இராமையா நாடார், மங்கபுரம் நாடார் தெரு, ஸ்ரீவில்லிப் புத்தூர்.

(6) திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, எம்.எல்.சி., ஸ்ரீ வில்லிப்புத்தூர்.

(7) திரு. ஆர். சந்திரன் பிள்ளை, வழக்குரைஞர், ஸ்ரீ வில்லிப் புத்தூர்.

(8) திரு. சி. சுப்பிரமணிய பிள்ளை, (ஓய்வு பெற்ற 'ஹார்வி' ஏஜண்ட்), ஸ்ரீ வில்லிப்புத்தூர்.

(9) திரு. ஏ. எஸ். சங்கரநாராயணன் செட்டியார், நகை வியாபாரி, ஸ்ரீ வில்லிபுத்தூர்.

(10) திரு. என். கே. கோபாலசாமி நாயுடு, மேற்கு இரத வீதி, ஸ்ரீவில்லி புத்தூர்.

(11) திரு. பீ. ஆர். கோவிந்தராஜுலு, நிர்வாக பங்குதாரர், பயனீர் மில், கோயம்புத்தூர்.

(12) திரு. ஆர். வெங்கடசாமி நாயுடு, நிர்வாக பங்குதாரர், ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர்.

(13) திரு. ஜி. கே. தேவராஜுலு, நிர்வாக பங்குதாரர், லட்சுமி மில்ஸ், கோயம்புத்தூர்.

(14) திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார், சிவானந்தா மில்ஸ், கோயம்புத்தூர்

1972 நவம்பர் 14]

(15) திரு. பி. என். ஆர். சின்னசாமி நாயுடு, நிர்வாக ஏஜண்ட், இராம கிருஷ்ணா மில்ஸ் ரோடு, கோயம்புத்தூர்.

(16) திரு. எஸ். ஜெயராம ரெட்டியார், எம்.எல்.சி., விருதுநகர்.

திருப்பணிக் குழுவின் தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு, எம்.எல்.சி. ஆவார்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணி இப்போது தொடங்கப்பெற்றுவிட்டதா ? இத் திருப்பணித் திட்டம் எவ்வளவுக்கு வகுக்கப் பட்டிருக்கிறது, எத்துணை காலத்தில் திருப்பணி நிறைவேறும் என்பது குறிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்தக் கோவிலினுடைய பெரிய கோபுரத்தைப் புதிப்பிப்பதற்கும் மற்றும் உள்ள கோபுரங்களையும் மற்ற இடங்களையும் பழுது பார்க்கவும் சுமார் 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்போது வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கொஞ்சம் விரைவில் முடியவேண்டுமென்றும் நம்முடைய திருப்பணிக் குழுத் தலைவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் அங்கேயிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் வேலை முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோபுர வேலைக்காக மட்டும் ரூ. 4 லட்ச மதிப்பீட்டில் அரசு ரூ. 3 லட்சமும் இன்னும் ஒரு லட்சம் கோவில் திருப்பணிக் குழு கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையோடு, அந்த வேலையைத் தொடர்ந்து நடத்துகிறார்கள். ஆனால் திருப்பணி செய்ய வேண்டிய வேலைகளுக்கு கிட்டத்தட்ட ரூ. 10 லட்சத்துக்கு அதிகமாகவே அற நிலையத்துறை அனுமதி கொடுத்திருக்கிறது. இப்போது நடைபெற்றுள்ள வேலைகள் ரூ. 4 லட்சத்துக்கு அதிகமாக நடைபெற்றிருக்கின்றன. இன்னும் ரூ. 6 லட்சம் தேவைப்படுகிறது. அதற்கு அரசு உதவி புரியுமா என்பதை அமைச்சர் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கனவே போடப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 4 லட்சம். அந்த ரூ. 4 லட்சத்தில் ரூ. 3 லட்சம் அரசாங்கத்திலிருந்து தந்திருக்கிறோம். மீதி உள்ளதை பல்வேறு கோவில்களின் நிதியையும் திருப்பணிக் குழுவினர் வசூலித்த நிதியையும் சேர்த்து அந்த வேலையைத் தொடர்ந்து செய்கிறோம். மேற்கொண்டும் அந்த வேலைகள் செய்ய வேண்டுமென்று திருப்பணிக் குழுவினர் தீர்மானம் போட்டு அனுப்புவார்களேயானால், அவைகளைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, கோபுர வேலை தனி, இதர பணிகள் வேறு. கோபுர வேலையல்லாத 10 லட்ச ரூபாய்ப் பணிகளை ஏற்கெனவே நம் மாநில அற நிலையக் குழு அனுமதித்திருக்கிறது. இந்த வேலைகளில்தான் சுமார் 4 லட்சம், 5 லட்சம் ரூபாய் அளவு வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் 5 லட்சம் ரூபாய் அளவிற்கு வேலைகள் பாக்கியிருக்கின்றன. நிதி பற்றாக்குறை காரணத்தினால் பாக்கியிருக்கிறது. இதற்கு அரசு உதவி புரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே திருப்பணிக் குழுவில் இடம் பெற்றவர்களின் பெயர்களைப் படித்தேன். நிதிப் பற்றாக்குறை வராமல் இருக்கத்தான் அவர்களையெல்லாம் போட்டிருக்கிறோம்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவடைந்தன.

2. அறிவிப்பு

(1) 1972–73 ஆம் ஆண்டுக்கான விதிகள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் குறித்து

MR. CHAIRMAN: I have to announce to the House that under rule 192 of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members to be Members of the Committee on Rules for the financial year 1972–73 :—

1. Hon. Dr. V. R. Nedunchezhiyan, Minister for Education and Local Administration.
2. Thiru M. P. Sivagnanam.
3. Thiru K. S. Abdul Wahab.
4. Thiru S. T. Adityan.
5. Thiru A. R. Damodaran.
6. Thiru A. P. Janardhanam.
7. Thiru S. Jayarama Reddiar.
8. Thiru R. Krishnaswamy Naidu.
9. Thiru T. K. Ponnuvelu.
10. Thiru G. Parangusam.
11. Thiru G. Swaminathan.
12. Thiru M. Rajah Iyer.
13. Thiru K. Rajaram.
14. Thiru V. Thangapandian.